செய்தி வெளியீடு எண்: 474/2017 நாள்: 09.08.2017

**பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்!**

**பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவிகள் பங்கேற்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்!!**

தமிழக மக்களின் நலனுக்காகவே வாழ்ந்து ஏழை எளிய மக்களின் துயர் துடைக்கும் வகையிலும் ஏழைக் குழந்தைகளின் கல்வி உணவின்றி தடைப்படக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தினாலும் மதிய உணவு திட்டத்தை செயல்படுத்தி வந்தவரும் தமிழக மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருப்பவருமான மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர்.அவர்களின் நூற்றாண்டு விழா வேலூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு அவரது புகழ் நிலைத்திடும் வகையில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளை 17.08.2017 அன்று காலை 8 மணி முதல் வேலூர் நேதாஜி விளையாட்டு அரங்கில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

அன்றைய தினம் செவித்திறன் பாதிக்கப்பட்டோர், பார்வைதிறன் பாதிக்கப்பட்டோர், கை, கால் மற்றும் உடல் பாதிக்கப்பட்டோர் மனவளர்ச்சி குன்றியோர், ஸ்பாஸ்டிக் குழந்தைகள் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு வகையான விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளது. மேலும் இவ்விளையாட்டு போட்களில் 100 மீ, 200 மீ, 400 மீ ஓட்டப்பந்தயங்கள், நீளம் தாண்டுதல், பார்வையற்றோருக்கான நின்று நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், வட்டத்தட்டு எறிதல், கால்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நடைப்போட்டி, மூன்று சக்கர வண்டி போட்டி, சக்கர நாற்காலி போட்டி, உருளை கிழங்கு சேகரித்தல், கிரிக்கெட் பந்து எறிதல், தடைதாண்டி ஓடுதல் போன்ற விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்த போட்டிகளானது 12 வயது முதல் 14 வயதுடையோர், 15 வயது முதல் 17 வயதுடையோர் மற்றும் 17 வயதிற்கு மேற்பட்டோர் என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசுப்பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்கள் உரிய அடையாள அட்டை அல்லது பள்ளி, கல்லூரி தலைமையாசிரியர்களிடமிருந்து சான்று பெற்று போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெரும் மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:

9/8/17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.